# ஓசை

கார்த்திகை – 2014

காலாண்டு கவிதைச் சிற்றிதழ்

குரல் : 09 இசை : 27



காலம் பிந்தினாலும்
கடைசி வருடத்தின்
இறுதிச் சுற்றில்
வலம் வரும் ஓசை
உங்கள் கரங்களில்..... இதோ

தாமதத்திற்கும் தடைகளுக்கும்
தக்க கரணங்கள் பல
அதில் தகுதிக்கு மீறிய சுமை
இதை ஒப்புக் கொள்வதில்
நாம் வெட்கப்பட வில்லை.

பிரபல்யமான ஏடுகளில்
பிரவாகமாய் பெருக்கெடுக்கும்
கவி வெள்ளம்... ஏனோ
சிற்றிதழ்களில் சஞ்சரிக்கவும்
சங்கடப்படுகின்றன.

காய்க்கும் மரத்தை நாடும்
காக்காய்களாக கவிதைகளும்
கால் பதிக்க
பாக்கள் குறைந்த பக்கங்களுடனே
ஊக்கம் கு றையாத
உழைப்புடன்
உரத்து ஒலிக்கும் ஓசை
ஓயாமல் தொடரும் இன்னும்...

ஆசிரியர்




ஆசிரியர் : மூதூர் முகைதீன்

வெளியீடு : மூதூர் கலை, இலக்கிய ஒன்றியம்
நொக்ஸ் வீதி, மூதூர் - 05


**மனிதநேயம் மண்ணில் மலர ஒலிக்கும் ஓசை**

30/=

# விடை கிடைக்கவில்லை

உடன்பிற வாத அண்ணர்
உயரிய எழுத்தின் மன்னர்!
கடமையில் ஓய்வு பெற்றும்
ஓயாமல் எழுதுகின்றார்!

சிறு கதை எழுத வல்லார்
சிறந்தவோர் கவிதையாளர்!
சிறுவரின் கதைகள் காதை
செய்தவர் விருது பெற்றார்!

ஒன்றாக இரண்டு நூலை
உவர்மலைக் கல்விச்சாலை
தன்னிலே வெளியிட் டாராம்
"தாமரைத் தீவான்" சொன்னார்!

"வீரகே சரி"யில் இந்த
விளம்பரம் தானும் போன
வாரத்தில் வந்த தென்று
வாத்தியார் ஒருவர் சென்னார்!

வாழ்த்தியோர் அஞ்சல் சேர்க்கும்
வாஞ்சையோ டிருந்த என்னை
வீழ்த்தினான் துயரச் சேற்றில்
விபரீதம் நடந்து போச்சே!

"அண்ணன் ஏன் உங்களுக்கு
அழைப்பிதழ் அனுப்ப வில்லை?"
என்னவன் கேட்ட பின்பே
எனக்குள் ஓர் ஆய்வரங்கம்!

கணத்திலே விடை என்னால்
கண்டிட முடிய வில்லை!
மணிக்கணக் காக யானும்
மனதினில் கோலம் போட்டேன்!

புத்தகம் போட்டு என்னை
புவியுளோர் காண, உந்து
சக்தியாய் இருந்த வர்க்கு
சடுதியாய் நடந்த தென்ன?

ஆண்டுகள் இரண்டு தானும்
ஆலையூர்ப் பதியை விட்டு
தாண்டியே வடபு லத்தில்
தரித்ததால் மறந்தா போனார்?

கையிலே காசு இல்லாக்
காரணம் தானா? இல்லை
செய்தொழில் இழந்து போயென்
சிறப்புகள் தொலைத்த தாலா?

இடப் பெயர் வுற்று வந்தும்
இன்னல்கள் காண்ப தாலா
மடலிட மறந்தார் அண்ணர்?
மனதிலோர் குழப்ப மாச்சு!

இடி மின்னல் பலத்த காற்று
இரவெல்லாம் மழையின் ஆட்சி!
விடிந்தது காலை; ஆனால் -
"விடையது கிடைக்க வில்லை!"

கவிமணி அ.கௌரிதாசன் (ஆலங்கேணி)

## புது உறவைத் தடுக்கிறது

சூறைக் காற்றுக்கும்
அஞ்சாத நெஞ்சும் தினம்
நடுங்கிச் சாகிறது
இப்போதெல்லாம்!
யாரைப் பிழை சொல்வது
யாதும் என் விதியோ
ஊரைப் பகைத்தால்
உட்காரவும் இடமின்றிப் போகும்.

காத்து வந்த உறவில்
கலக்கம் இன்று தெரிகின்றது
நேற்று இருந்த சிநேகம்
நெருஞ்சி முள்ளாய்ப் பாய்கிறது.

உயிரோட்டம் அற்றுப் போகிறது
உதிரப்படும் புன்னகையில்
நலிவடைந்து செல்கிறது
நம்பக தன்மைகளும்.மலர்ந்திருந்த
உறவுக்கிளை
மண்நோக்கிச் சாய்கிறது
புலர்கின்ற பொழுதுகளும்
புது உறவைத் தடுக்கிறது.

**கலாபூஷணம் பி.ரி.அஸீஸ்**
(கிண்ணியா)

## கன்னம்

கன்னித் தமிழுக்கு
சங்கம்
கன்னம்.

கவிதைப் பெண்ணுக்கு
குங்குமம்
கன்னம்.

முத்தமிழ் நெஞ்சுக்கு
முத்தாரம்
கன்னம்.

மூத்தவர் மனசுக்கு
மரபு
கன்னம்.

இளையவர் நனவுக்கு
புரட்சி
கன்னம்.

காதலர் கனவுக்கு
மருட்சி
கன்னம்.

கணனித் தாமரைக்கு
விரல்கள்
கன்னம்.

மணியின் ஒலிக்கு
ஓசை கன்னம்
பொங்கு தமிழுக்கு
துணிவு கன்னம்.

**புலேந்தி திலீப்காந்த்**

# மலைநாட்டு வனப்பு

"உடத்தலவின்னை" என்னும் அழகிய
கிராமத்தில் இல்லற வாழ்வை
இனிதே கழிக்கும் நான்
கிராமத்தை சூழ்ந்த மலையக
இயற்கை காட்சிகளோ
கண்மூடாது கண்டு களிக்கக் கூடியவை
ஏறி இறங்கும் மலைநாட்டுப் பாதைகள்
எமக்கு நன்கு பரிச்சயம்
உடலுக்கு உரமூட்டும்
உடற்பயிற்சி ஆகிவிடும்
திடகாத்திரமாய் நோயின்றி
வாழ்ந்திட மலையக புவியல்
அமைப்பு சாதகமானதே
பஸ்வண்டியிலும் புகையிரதத்திலும்
பயணம் செய்திட மலைநாடு
நல்ல இயற்கை வசதி கொண்டதே
சலசல எனறுபாயும் நீர்ச்சுனைகள்
நீர்வீழ்ச்சிகள் பச்சைப்பசேல் என்ற இயற்கை
தாவரங்கள் வனப்பை வர்ணிக்க
மொழிவளம் போதாதே"

**ஆய்சா ஸீனாஸ் அஸ்வர்**

## வாக்கு மாறாதது

எல்லாப் பூக்களிலும்
உன் வாசம்
என் கனவு
உன் முன் ஏந்திய
பிச்சைப் பாத்திரம்
உன் கண்ணால் தான்
நான் முதன் முதலாக
என்னைப் பார்த்தேன்
காதலுக்காகத்
துண்டிக்கப்பட்டுத் துடிக்கும்
ஒரே மண்புழுவின்
இரு துண்டுகள்
நாம்.
உன் அழகு
உனக்கு வரம்.....
எனக்கோ சாபம்
உன்னைக் காதலித்ததற்கு
பதிலாக மரணத்தைக்
காதலித்திருக்கலாம்.....
அது வாக்குத்
தவறுவதேயில்லை!

**(நூல்: மின்மினிகளால் ஒரு கடிதம்)**
**கவிக்கோ அப்துல் றஹ்மான்**

# மனம் தளராதே

ஆல மரமொன்று
தேம்பியழுகிறது

வெட்ட வெளியில்
விரைந்து வளர்ந்து
பட்டுவிடாமல்
பசுமையாய்த் தளைத்து
வட்டமிடும் காக்கை
குருவி பறவையினம்
இட்டமுடன் விளையாடி
இனிய நிழல் கொடுத்த
ஆலமரமது
வெயிற் கொடுமையினால்
வியர்த்து நனைந்து
பைய இளைப்பாறும்
பாதசாரி இயலாதோர்
எல்லோருக்கும் ஆறுதலாய்
நல்லோர் சேவகனாய்
நன்மையளித்த மரம்.

தவறும் செய்யும் சிலர்
தரித்து இடம் பிடிக்க
அவதிப்பட்டதன் ஓலைகளை
வெட்டி வீசி விரயம் செய்திட்டார்.

பொதுமக்கள் சேவைக்காய்
வதிவிடம் காத்து வாழ
வழிசெய்த மரமே
வளருமினம் நீயென்றா
வினையுனக்குச் செய்தார்
தளராதே செழிப்பாய்
சதிகாரர் வருந்துவார்
உன் வித்து தளைத்தோங்கும்.

**-மருதூர் ஜமால்தீன்-**

# கடல்

கடலின் மேலே
கப்பல் போகும்
படகும் அதிலே
பாய்ந்து செல்லும்.

தடமே தெரியா
தண்ணீர் மேவும்
உடலும் குளிரால்
உறைந்து நடுங்கும்!

தொடரும் முடிவும்
தெரியாத் திசையில்
கடலின் வேகம்
கணத்தில் எழும்பும்!

படரும் மேகம்
பரந்து சூழும்
உடனே மழையும்
உரத்துப் பெய்யும்!

ஓடம் ஓட்டும்
உழைப் பார்வாழ்வு
தேடல் கடலாம்
தலமும் அதுவாம்!

கடலும் அலையும்
கலங்கும் நீரும்
உடலும் உயிரும்
உணர்வும் கடலே தாம்!

**மூதூர் "கலைமேகம்"**

# இஸ்லாமிய கல்விகற்று உயர்ந்திடுவீர்!

இஸ்லாமிய கல்வி கற்று வாழ்வில் ஒளி ஏற்றிட
நாளும் பொழுதும் முயன்றிடுவீர்.
நல்லொழுகவியல் பயின்று திகழ்ந்திடுவீர்
நீதி வழி வாழ்ந்த 'நபிமுஹம்மத் அடிச்சுவட்டை
பின்தொடர்ந்து சென்றிடுவீர்.
பாடசாலையில் கற்கும் கல்வி ஏட்டுச்சுரக்காயாக
அமைந்திடில் கல்வியின் நோக்கமே தவறிடும்
ஆசான் கற்பிக்கும் அறிவு வழி நின்றிடுவீர்.
நேர்மை உண்மை இலட்சியமாய்க்கொண்டிடுவீர்
கற்ற கல்வியால் காரிருள் அறியாமை அகற்றிடுவீர்
தூய இஸ்லாமிய நெறிமுறை கடைப்பிடித்திடுவீர்;
அல்லாஹ்வை ஏகனாய் வணங்கியே
இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) ஸுன்னா பின்பற்றுவீர்
குர்ஆன் கல்வியின் ஊற்று
அண்ணலின் நல்லுரைகள் அறிவுக்கு விருந்து
என்பதை உணர்ந்தே இஸ்லாமிய கல்வி கற்றே
இகத்தில் நல்லமல் புரிந்தே
ஆஹிரத்தில் சுவனத்தின் வாரிசுகளாகுவீர்

**ரிம்ஸா பர்வின் - தும்புளுவாவை**

# பட்டினிசா

நெஞ்சு பொறுக்குதில்லை நிலை கெட்ட மாந்தர்
பஞ்சத்தால் மடிவதை பார்க்கவும் முடியலயே
கஞ்சி குடித்த மண்ணில் காரியங்கள் பலசெய்த
பிஞ்சு குழந்தைகளும் பேரழிவால் மடிவதை.

வண்ணச் சிறகடித்து வானத்தில் பறந்து சென்ற
என்னருமை தமிழர்கள் இழிநிலையால் சாவதை
சின்ன விழி கொண்டு சீராக நாம் நோக்க
என்னபயன் பெற்றோம் ஏன் இந்தக் கொடுமை

வட்டிலிலே சொறெடுத்து வாயார உண்டநாம்
பட்டியலை கூறவா பரம்பரையை சொல்லவா
முட்டிமோதி அன்னதானம் மூட்டியதை காட்டவா
பட்டினியால் மனிதன் நாம் பரிதவிப்பதை பார்க்கவா.

சொத்து சுகமிழந்து சொந்த வாழ்வு விட்டு
பெத்து சுமந்தாயே பெருவயிறு காய
கத்தும் குழந்தைகளும் கஞ்சிக்கும் வழியில்லாமல்
சித்து விளையாட்டின் சீரழிவை நாம்காண.

கையில் காசிருந்தும் களம் நிறை பொருளிருந்தும்
பையில் வாங்கிவந்து பசியாற வழியில்லையே
பொய்யில் நிறைந்தநாடு புதுமைமனிதர் நிறைந்தவீடு
மெய்யில் உண்மையில்லை மேதினி எப்படி வாழும்.

உண்மை உரைப்போர் ஊரில் வலம் வருவதில்லை
பெண்மைபோற்ற நிற்கும் பெருமனிதர் நாட்டிலில்லை
வன்மை கொண்டநெஞ்சர் வாழும் இந்த நாட்டில்
உண்மை ஒளிவீசுமா? உலகமே எழுந்து நடக்குமா?

**சீ.என்.துரைராஜா** (திருகோணமலை)

# தொழிலோ? தொல்லையோ?

அறியாமல் சுவைத்து
அவஸ்த்தைப்படும்
மருந்தாகியது
இந்த வேலை பார்க்கும்
வேண்டாத வாழ்வு!

உபாதைகள் கடந்து
உணர்வுகள் உயிரிழந்து
குடும்பமும்
தொழிலுமாய்
இரு முனைத் தாக்குதல்
வாழ்வு!

தாரமென்ற
பல குறையும்
தாயென்ற பல குறையும்
தொழில் புரிந்து
திரும்புகையில்
தொலைந்து போகும்
நிம்மதி
எவருக்கும் திருப்தி இல்லை.
எனக்கும் திருப்தி இல்லை.

கஷ்டங்கள் நீங்கவென்றே
இஷ்டம் போல்
தொழில் செய்ததில்
நஷ்டம் போனது யாவும்,
வாழ்வு நொந்தது நாளும்,

வீட்டிலும், தொழிலிலுமாய்
இயங்கி இயங்கியே
இயக்கமில்லா
இயந்திரமாய் இதயம்

வீட்டு வேலைகள்
முதுகின் மேல் சுமையாகும்
தொழிலில் எப்போதும்
மூளை ரணமாகும்.

சதக்காசும் மிச்சமின்றி
சதாவும் சுழன்று செல்லும்
மாதக் கடைசிகள் என்னை
மனமின்றி
மிரட்டிச் செல்லும்.

சமத்துவம் வேண்டாமே,
சாதனைகள் வேண்டாமே
விட்டு விடுங்கள்
வீட்டில் என்னை
மனையாள மகிழ்வாக.

**பூகொடையூர்**
**அஸ்மா பேகம்**

சுக்கு நூறாகின வெல்லாம்
வெறுமைக்குள் வந்து குந்திக்கொண்டது
மிக மிக நோவு தருகிற கவலை.

முகம் கூட எனதல்லாது
வெடித்து துகள் துகள்களாகிப்போன
கண்ணாடியில் தெரிகின்ற விம்பங்களாய் ஆனது
கூவிக் கொண்டு அடித்து சாய்கிற
புயலாய்
எல்லோரும் என்னில் மாறி மாறி இன்பம் கண்டனர்
பூமியெங்கும் சிதறிக் கிடந்தேன்
பொறுக்கிச் சேர்ப்பாரற்ற
கைக்குக் குத்துகிற கூர்த்துகள்களாய்

நானல்லாது போகிற நாட்களிளெல்லாம்
நேர்கிறது இக் கொடுமை.

**ஜிப்ரான் (சரிநிகர் - 1996)**

## இயற்கையின் சீற்றம்

தென்றல் பூப்படைந்தால்
புயலாகிப் புறப்படும்
மேகம் கருக்கொண்டால்
மேதினியை மூழ்கடிக்கும்
பேரலைகள் பொங்கிவிட்டால்
பேரழிவு பெருகிவிடும்
நதிகள் கரைபுரண்டால்
நாட்டினிலே நாசம் வரும்
இயற்கை கோபமுற்றால்
எல்லாமே அழிந்து விடும்.

**எம்.றிகாஸ்** (மூதூர்)

படித்த கவிதை

# சிட்டுக்குருவியே .. என் சிட்டுக்குருவியே !

இப்போதெல்லாம்
முற்றது பூமரங்களும் குப்பை கூளங்களை
உற்பத்திப்பதேயில்லை
ஷம்பூ மணக்கும் குளியலறைத் தரை விளிம்புகளில்
அழுக்குப் பாசிகளோ வளருவதேயில்லை
துவைக்காத துணிகள் கூட
சலவைத்தூள் விளம்பரத்தில் மடமடக்கும்
அழுத்திமடித்த ஆடைகளாய்
அலம்பாத பாத்திரங்களும் பளபளப்பில்
நட்சத்திரங்களை வென்றபடி....
இப்போதெல்லாம்
சமைக்காத சட்டிபானைக்குள்ளும்
கறிவேப்பிலையும் ஏலமும் கமகமக்கும் கறிசோறு
ஈரத்துணியுரசாத தரையோடுகளிலும்
படிவதாயில்லை தூசிதுணிக்கை
இப்போதெல்லாம்....
புதிதாய் அணிந்து அள்ளிப் போட்டுக் கொண்டுமான
மாலை நேர பயணங்களிலெல்லாம்
மனசு இஸ்டப்படுவதேயில்லை
மேசை இழுப்பறைக்குள் வாரப்பத்திரிகையின்
கவிதைப் பக்கங்களை நறுக்கிப் போடத் தோணுவதுமில்லை
இணையத்தில் கூட புதிதாயொன்றும்
இணைப்பதாயுமில்லை
சின்னத்திரைகளுக்குள்
மூக்குச் சிந்திக்கூட வெகுநாளச்சு
வழிபாடும் அது சார்ந்தவையும் தவிர்ந்து
முழுநாளின் தேடலுமே என்
ஒற்றைப் பைக்குள்ளே ஒடுங்கிப் போனதா?
சிட்டுக்குருவியே சிட்டுக்குருவியே...
வெண்பஞ்சு மேகங்களை இறகாயணிந்தே என்
மனசு முழுக்கச்சிறகடிக்குமென்
சின்னக்குருவியே கொஞ்சம் வாயேன்,
இன்றைய உன் வகுப்பறைக்குள் கடைசிமணி
எப்போது ஒலிக்குமென சொல்லிவிட்டுப் போயேன்.

எஸ்.பாயிஸா அலி
(நன்றி : தினகரன் 18.07.2010)

# மானம் போச்சு

இஸ்திரிகை மடியாத ஆடைகளணிந்து
வாசனைத்திரவியங்கள் பூசி
நஸ்றுதீன் முதலாளி வீடு செல்ல வேண்டி
கச்சிதமாகவே புறப்பட்டான் என் நண்பன்.

நடையிலும் கவர்ச்சி மிடுக்குக் காட்டி
அகத்தினில் பொழிவு காட்டி
இடையிலே செல்போன் செருகியவண்ணம்
ஏறுபோல் நடை நடந்தான் அவன்.

நஸ்றுதீன் வீடுவந்து அதன் படலை
கதவைதிறந்து காலையும் வைத்திட்டான்
புஸ்ஸென்று வந்ததே வேங்கைபோல் வாயை
திறந்தவண்ணம் முதலாளி வீட்டு நாய்.

வந்த வேகத்தில் பாய்ந்ததே அவனின் மேலே
நண்பனும் பயந்து அலறியே விட்டான்
பூந்து வெளியே ஓடப்பார்த்திட்டானே
அவனது தெம்பெல்லாம் பறந்து போச்சே.

அலங்காரமாய் வந்த என் நண்பன் தன்
ஆடைகளை உற்றுப்பார்த்திட்டவன்
வெலவெலத்துப் போனானே அவனும்
ஆம் உண்மையில் அவனுக்கு மானம் போச்சு.

கலாபூஷணம் எம்.எம். அலி அக்பர் (கிண்ணியா)

# ஏன் தாயே

விடிவு காணா விழிகளுக்கு ஏன் இந்த உறக்கம்?
விடியும் விடியும் என எதிர்பார்து ஏமாந்து
விடிந்த பொழுதுகள் தான் எத்தனையோ!
விடியாத துயரக் கதைகள் எத்தனையோ!

இலட்சிய வெறியொன்று இயக்கி நிற்க
இளமையின் திறமைகள் விலகி நிற்க
இப்படித்தான் வழி என்ற எல்லைக் கோட்டில்
இறுதிவரை நின்று நீ வாழ்ந்து பார்த்தாய்....
கண்நிறை செல்வமெலாம் கணப்பொழுதில்
காசாக்கிக் குடித்தழித்த கணவருக்கு
"தூசாமே செல்வம் இது" தூங்குவீர் அமைதியாய் என
வாய் மலர்ந்த வார்த்தை இனி வரவே வராதோ!

பொறுமையே பெருமை எனப் பேதையானாய்
வறுமையே வாட்ட என்றும் கோழையானாய்
மண்ணில் பிறந்தன் மாண்படைய முடியாது
கண் மறைந்ததேன் தாயே கவிதைப் பொருள் வளர்த்தாயே

தாவி வந்த தாலாட்டில் பண்ணிசைத்தாய்
ஆவி தந்த அல்லாஹ்வின் ஆணையேற்றாய்
மழலைகள் மறுமலர்ச்சிக் குழைத்து மங்கி
மறைந்த சுகம் தேடி நீ பறந்தாயோ!

உலகாசை ஒதுக்கி நீ வாழ்ந்தாயே!
உலகோர் முன் வளமின்றித் தாழ்ந்தாயே!
சுடர் விட்ட மெழுகாகக் கரைந்தாயே!
சுடர் விடுமுன் நாங்கள், நீ மறைந்தாயே!

**கலாபூஷணம் ஆர்.ஹசிமா ரஜாப்டின் (நீர்கொழும்பு)**

# இறைவன் மனிதன் சமமன்று

மாபெரும் வல்லமையாளன் படைத்திட்டான் உலகை
மண்ணில் காணும் சீவராசிகளை படைத்தவனும் இறைவனே!
மனிதனை இன்று படைப்பவனாய் காட்டி
மனிதனும் "சிருஷ்டி கர்த்தா" என்றிடல் தகுமா?

இறைவன் தந்த ஆற்றலினால் மனிதன் இங்கு
மறைவாய் இருந்த சிலதை வெளியே கொண்டுவந்தான்
மறை கூறும் மனித இனம் சிருஷ்டிகளிளல் உயர்ந்ததாய்
இறைவன் ஆக்கினான் உலகில் ஆற்றலும் வழங்கினான்.

மாபெரியோன் இறைவன் தனக்கு சமமாய் மனிதனை
மானிலத்தில் கருமம் செய்ய விட்டிடவில்லை ஆயின்
மனிதனால் உயிர்கொடுத்துச் சிருஷ்டிக்க முடியுமா?
மண்ணில் இயற்கை அனர்த்தம் மனித சக்தியை மீறினதில்லை

இவர் இன்று பிறப்பவர் இவர் மரணம்
இவ்விதம் நிகழும் இந்நாளில் நிகழும்
என்றுரைக்கும் வல்லவர் யாரும் உள்ளனரா?
சோதிடம் கூறுபவர் தானும் இதனை உணர்த்திடுவாரா?

எங்கும் எப்பொழுதும் பெரியவன் இறைவனே!
பாங்குற இறைவன் கட்டளை மீறாது நடத்திடல்
எங்கள் அனைவோர் கடமை என்பதுணர்வோம்
ஏகனைவழுத்தி வணங்கி வாழ்த்திடத்துணிவோம்.

**கலாபூஷணம் வெலிப்பன்னை அத்தாஸ்**

# நான் நட்ட மரம்

என் அன்பு மகளே...
உனக்காக ஒரு மரத்தை
உரமிட்டு
ஊன்றி நட்டியுள்ளேன்
நம் வீட்டு முற்றத்தில்.

நிச்சயமாய் அது
நிலைத்து நிழல் தரும்
தன் அடர்ந்த கிளைகளால்
நாளை உனக்கு.

அதில் ஊஞ்சல் கட்டி
உன் உதிர உறவுகளை
உட்கார வைத்து
உல்லாசமாக ஆடவிடு...
அவர்கள் ஆனந்தமாய்
அக்கிளைகளைப் பற்றி
ஆடிப் பாடும்போது
என்தோள்களில் தொங்குவதாக
நான் நினைத்து மகிழ்வேன்
மகளே.

அந்த விருட்சத்திலிருந்து
உதிர்ந்து விழும்
ஒவ்வொரு இலையும்
என் அனுபவ முதிர்ச்சியின்
அறிவுப் புதிர்களாகும்
அதனை அகற்றிவிடாதே...
அத்தனையையும் சேகரித்து
உரமாக்கித் தூவு
நம்மரம் இன்னும் செழிப்பாகும்

ப்ரிய மகளே,
இன்று உன்னைப் பிரிந்து
என் நிரந்தர வீட்டில்
நிலைகொண்டு விட்டாலும்
நிச்சயமாக
நான் நட்ட மரத்தின் நிழலில்
நீயும் நம் உறவுகளும்
நிம்மதியாக இருப்பீர்கள்
என் நினைவுகளுடன்.

காலம்தோறும்
அதில்பூக்கும் பூக்கள்
எனது வாழ்த்துக்களாக
மணமூட்டி
உங்களை மகிழ்ச்சிப்படுத்தும்.

ஆமாம்
அதன் ஒவ்வொரு இதழும்
ஒரு கதையை உணர்த்தி
உன் வாழ்க்கைக்கும் மணமூட்டி
அது அழியாத தர்மமாக
நிலைத்து
ஆகிறத்திலும் மணக்கும்
எனக்கும்.

அதனால்
அம்மரத்தை அழகாகப்
பாரமரித்து
அடுத்த தலைமுறையும்
அனுபவிக்க வழிசெய்.
இறுதியாக ஒன்று மகளே...

இது நிழல் மட்டுமல்ல
சுற்றத்தாருடன் சூழ்ந்திருந்து
கூடி உண்ண
சுவையான கனியும்
தரும்...முடியாதபோது சுள்ளியாய்
உன் அடுப்பில் கிடந்துசுடர்
விட்டும் எரியும்
நான் நட்ட மரம்.

**தொன்மையூர் கவிராயர்**

# நம்பிக்கை

உனது பாத்திரத்தில்
இன்னமும் சிறிது தேன்
எஞ்சி உள்ளது.
ஈக்களைத் துரத்து
தேனைப் பாதுகாத்திடு.

இன்னமும் கூட
உனது வீட்டுக்கோர் கதவுண்டு
இன்னமும் கூட
உனது வீட்டிலோர் பாய் உண்டு
கதவை மூடு
குளிர் காற்றில் இருந்தும் உன்
குழந்தைகளைக் காப்பாற்று.

மிகமிக மோசம் இக்குளிர் காற்று
குழந்தைகள் நன்கு தூங்குதல் வேண்டும்

நெருப் பெரிக்கச் சிறிது விறகு
கொஞ்சம் கோப்பி
நெருப்புச் சுவாலை
இன்னமும் கூட உன்னிடம் உண்டு.

**மஹ்மூட் தர்வீஷ்**

# மழையின் பாடகன்

சந்திரனைத் தழுவிக்கொண்டிருக்கும்
என் கிராமத்து மலையிலிருந்து
நீ மரங்களைப் பிடுங்கி எறியலாம்
சுவர்கள் இருந்த அடையாளம்
தெரியாமல்
என் கிராமத்து வீடுகளை
நீ உழுதுவிடலாம்.

என் இசைக் கருவியை
நீ பறிமுதல் செய்யலாம்
அதன் தந்திகளைப் பிய்த்தெறிந்து
அதன் சட்டகத்தைத்
தீயில் எரிக்கலாம்.

ஆனால்
என் இசையின் மூச்சை
உன்னால் திணறடிக்க முடியாது.

ஏனெனில்
நான் பூமியின் நேசன்
காற்றின் பாடகன்
மழையின் பாடகன்

**சலீம் ஜுப்றான்**

**நன்றி : பலஸ்தீனக் கவிதைகள் கவிஞர். எம்.ஏ. நு.்.மான்**

# எமது பிரதேசத்தின் அண்மைக்கால புதிய வரவுகள்

(கவிதை நூல்கள்)

## "பொன்னாவரை"

ஆசிரியர் : சேனையூர் இரத்தினா
வெளியீடு : அனாமிகா வெளியீட்டகம்
தொடர்பு : சேனையூர் இரத்தினா, சேனையூர், மூதூர்
தொலைபேசி : 077-3911191

## "எரி கிடங்கைப் பயந்து கொள்"

ஆசிரியர் : மூதூர் முறாசில்
வெளியீடு : பீஸ் ஹோம் மூதூர்
தொடர்பு : பஸார் பள்ளி வீதி, மூதூர் - 4
தொலைபேசி : 077-2985039

(ஐந்து நூல்கள்)

- நாயகக் காவியம்
- ஊர் துறந்த காவியம்
- மனிதம்
- அன்பின் மகனுக்கு
- எஸ்.எல்.எம்.முகைதீன் கவிதைகள்

ஆசிரியர் : மூதூர் எம்.எம்.ஏ.அனஸ்
வெளியீடு : மூதூர் கலை இலக்கிய ஒன்றியம்
தொடர்பு : எம்.எம்.ஏ.அனஸ், பெரியபாலம் மூதூர்
தொலைபேசி : 077-6288299

Editor, osai, Knox Road, Mutur – 05
TL : 077-4203500

ISSN – 2012 - 8126